Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.

SESSIONS CASE NO.325/2023

Deposition of CW1

| | | | |
|---|---|---|---|
| Name | : Dr.S.Deepa | Village | : |
| Father's / Husband's Name | : N.Sivaprakasam | Calling | : |
| Age | : | Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 31st day of October 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை கீழ்பாக்கம் அரசு மனநல மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகின்றேன். 20.08.2025 தேதியன்று இவ்வழக்கில் இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் படி எதிரி செல்வி, க/பெ.ஹரி என்முன்பாக 21.08.2025 அன்று மனநல பரிசோதனைக்காக முன்னிலை படுத்தப்பட்டார். அவரை நான் பரிசோதனை செய்தபோது அவரது முழுமையான மருத்துவ வரலாறு நடத்தை பரிசோதனை உடல்பரிசோதனை மற்றும் தொடர்ச்சியான மனநிலை ஆய்வுகள் 21.08.2025, 02.09.2025 மற்றும் 04.09.2025 ஆகிய நாட்களில் மேல்கொள்ளப்பட்டது. தற்போது நான் மருத்துவ பரிசோதனை செய்த செல்விக்கு தூக்கமின்மை மற்றும் நடத்தை மாற்றம் எதுவும் இல்லை. கேள்விகளுக்கு பொருத்தமான பதில் அளிக்கும் நிலையில் இருந்தார். பேச்சின் போது கண் தொடர்பு பேணினார். நல்ல ஒத்துழைப்பும் கொடுத்தார். அவரது மனநிலை இயல்பான நிலையில் இருந்தது. சிந்தனை மற்றும் காட்சி தவறுகள் எதுவும் இல்லை. அவர் கேள்விகளை புரிந்துகொண்டு பொருத்தமான பதில் அளிக்கும் மனநிலையில் இருந்தார். அவருக்கு குற்றச்சாட்டுகள் மற்றும் அதன் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வு உள்ளது. நீதிமன்ற நடவடிக்கைகளை புரிந்துகொள்ளும் திறன் உடையவராக இருக்கின்றார். எனவே அவர் விசாரணைக்கு தகுதியுடையவராக இருக்கின்றார். அவரது நோயின் தன்மை தீவிர மனநோய் ஆகும். தற்போது மருந்துகள் மூலம் அவர் நலமாக

இருக்கின்றார். மருந்துகளை நிறுத்தினால் நோயின் தாக்கம் அதிகமாகும் வாய்ப்புண்டு. ஒரு நபரின் மனநலத்தின் சதவிகிதம் பற்றி மருத்துவ ரீதியாக எதுவும் அறுதியிட்டு கூறமுடியாது. அவர் வாழும் சுற்றுப்புறம் சமூக உறவுகளை பேணுதல் மற்றும் அவர் செய்யும் வேலையை பொறுத்து தான் அவரது மனநிலை இருக்கும். நான் பரிசோதனை செய்த செல்வி சிறையில் இருப்பதால் அவரது மனநிலையின் அளவை துல்லியமாக மதிப்பிடமுடியாது. நான் மருத்துவ பரிசோதனை செய்த திருமதி.செல்வி அவர்கள் குற்ற வழக்கில் எதிர் வழக்காட கூடிய அளவிற்கும் வழக்கின் தன்மைகளை புரிந்துகொள்ளும் அளவிற்கு தகுதியுடையவராக இருக்கின்றார். இது குறித்து நான் வழங்கிய சான்றிதழ் Ex.C1.

**குறுக்கு விசாரணை இல்லை.**